Registered as a News Paper பக்கங்கள் 4 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 20 04 - 08 - 1992 செவ்வாய்க்கிழமை ஓசை 168

## புதிய வகைப் பாஸ்போட் நேற்று முதல் விநியோகம்

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வழங்கப்படும் பாஸ்போட்டுகளின் தரத்திற்கு ஏற்ப இலங்கைப் பாஸ்போட்டுகள் வழங்கப்படும் என குடிவரவுகுடியகல்வு கட்டுப் பாட்டாளர்வோல்டர் பெர்னான்டோ தெரிவித்துள்ளார். இதனால் உலக நாடு களில் இலங்கைப் பாஸ்போட்டுகள் சந்தேகத்திற்கு இடமானவையாக இனிமேல் கருதப்படமாட்டாது என்றும், பாஸ்போட் மோசடிகளை முறியடிப்பதற்காகச் சர்வதேச இன்டர்போல் பொலிஸாரின் சிபாரிசுகளுக்கு ஏற்ப சர்வதேச விமானப் போக்குவரத்து தாபனத்தின் விதிமுறைகளை அனுசரித்து இயந்திரங்கள் மூலம் சரி பிழைகளைக் கண்டறியக் கூடிய இலங்கைப் பாஸ்போட்டுகள் நேற்றுமுதல் விநியோகிக்கப்பட்டது என்றும் வோல்டர்பெர்னான்டோ தெரிவித்தார்.



விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று சிங்கள மீனவர்களை விடுதலை செய்து, உத்தியோகபூர்வமாக யாழ். சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளிடம் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் ஒப்படைப்பதை முதலாவது படத்திலும், விடுவிக்கப்பட்ட மூன்று சிங்கள மீனவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட 3 சிங்கள மீனவர் விடுதலை

விடுதலைப் புலிகளால் கடந்த ஜனவரி பதின்நான்காம் திகதியன்று தாழையடிப் பகுதிக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட ஆறு சிங்கள மீனவர்களில் மூவர் நேற்று கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் அவர்களால் வலிகாமம் பகுதி கடற்புலிகள் செயலகத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிடம் கையளிக்கப்பட்டனர். விடுதலை செய்யும் இந்த நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொண்டார். விடுதலை செய்யப்பட்ட மூன்று மீனவர்களும்,

பாவுறு மாவுல் (52 வயது, சீனகுடா, கொட்பே, திருக்கோணமலை), கரேடிஸ்அப்பு கொடிப்பிலி சூரிய ஆராய்ச்சிகே சிறிசேனா (50 வயது, பியதாசகடைப்பாறை கோணேஸ்வரா வீதி, திருக்கோணமலை), அல்பேர்ட் றணதுங்க ஆராய்ச்சிகே ரூபசிங்க (46 வயது, பசால் மாவத்தை, ஆண்டான்குளம். திருக்கோணமலை) ஆகியோராவர்.

### மனிதநேய அடிப்படையிலே மீனவர் விடுவிக்கப்பட்டனர்

-மறவன்

எமது கடற்பரப்பில் கடந்த மாசி மாதத்தில் கைது செய்யப்பட்டு இது காலவரை எமது பாதுகாப்பில் இருக்கும் ஆறு மீனவர்களில் மூவரை விடுதலை செய்து ஆபம்பாது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிடம் ஒப்படைக்கின்றோம். தமிழீழப் போராட்டத்தை நடத்திவருகின்ற போதும் சிங்கள மக்களின் நலன்களையும் கவனத்தில் எடுத்து மனிதாபிமானத்தோடு எமது தலைவரின் பணிப்பிற்கிணங்க இவர்களை விடுவிக்கின்றோம்.

இவ்வாறு நேற்று கடற்புலிகள் அமைப்பின் வலிகாமம் பிரிவுச் செயலகத்தில் மூன்று மீனவர்களை விடுவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் குறிப்பிட்டார்.

தாழையடிக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட ஆறு பேரில் மூவர் இன்று விடுவிக்கப்படுகின்றனர். ஆனால் எமது மீனவர்கள் ஆழம் குறைந்த பரவைக் கடலில் அன்றாட சீவனப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மட்டக்களப்பில் மீண்டுமொரு அதிரடி; 15 இராணுவம் பலி; பலர் காயம்

## உதவிக்கு விமானப்படை விரைவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆயித்தியமலைக்கும் - கரடியனாற்றிற்கும் இடையே ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். ஆண் போராளிகளும், பெண் போராளிகளும் இணைந்து நடத்திய இவ் மின்னல் வேகத் தாக்குதலில் 15 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.பலர் காயமடைந்தனர் பல ரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகள் தரப்பில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## விமானம் மூலம் அகதிகள் திருமலை- திரும்பினர்

(திருமலை)

சென்னையிலிருந்து புறப்பட்ட விசேட விமானம் மூலம் 132 இலங்கை அகதிகள் நேற்று மாலை திருமலை வந்தடைந்தனர். இதனைத் தொடர்ந்து நாளை மறுதினம் மற்றொரு தழுவினர் விமானம் மூலம் திருமலைக்கு அனுப்பிவைக்கப் மாத இறுதிக்குள் 1080 பேர் விமானம் மூலமும் 2700 பேர் இராமேஸ்வரத்திலிருந்து தலை மன்னாருக்கு கப்பல் மூலமும் அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அகதிகளாக

## செஞ்சோலை இசைமாலை

(நமது நிருபர்)

செஞ்சோலைச் சிறார்களும் விடுதலைப்புலிகளும் இணைந்து வழங்கும் இசைமாலை நிகழ்ச்சி இன்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அரங்கில் மாலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

செஞ்சோலை நிதி சேகரிப்

### புலிகள் தரப்பில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று நண்பகல் ஆயித்திய மலை இராணுவ முகாமிலிருந்து கரடியனாறு இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற இராணுவ அணியே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

சுமார் 40 பேர்களைக் கொண்ட இந்த இராணுவ அணியை 12.50 மணியளவில் விடுதலைப் புலிகளின் ஆண் போராளிகளும், பெண்போராளிகளும் இணைந்தஅணி வழிமடக்கித் தாக்கியது. பதினைந்து நிமிடங்கள் வரை நீடித்த இத்தாக்குதலின் போது 15 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கு உதவியாக இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், ஒரு உலங்கு வானூர்தியும் மாறி, மாறி அப்பகுதியில் ஒன்றரை மணித்தியாலத்திற்கு மேலாகத் தாக்குதல் நடத்தின இதில் குண்டுவீச்சு விமானங்கள் பதின்மூன்றிற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசின உலங்கு வானூர்தி 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டவண்ணமிருந்தது.

# 6 வேங்கைகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஆயித்தியமலை சிறிலங்கா இராணுவ முகாம் இராணுவத்தினரின் அணி ஒன்று கரடியனாறுஇராணுவ முகாம் நோக்கிரோந்து சென்றவேளை விடுதலைப் புலிகளின் ஆண், பெண் போராளிகள் வழிமறித்து நடத்திய அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் இரு பெண் போராளிகள் உடபட ஆறு புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

மேற்படி அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த கப்டன் நடேஸ்வரன் (நடேஸ்) (சிவகுரு சிறிகாந்-பெரிய கல்லாறு), லெப்டினன்ட் விவேக்கா (குணத்துங்க-சத்தியவாணி - குறிஞ்சி நகர் - வாழைச்சேனை), லெப்டினன்ட் நிலாந்தி (தர்மலிங்கம் ராஜேஸ்வரி-சந்திவெளி மொரக்கொட்டாஞ்சேனை), 2 ஆம் லெப்டினன்ட் சேந்தன் (பொன்ராமன் புஸ்பராசா கதிர்காமம் - அம்பாறை), வீரவேங்கை தமிழ்வதனன் (மயூரன்) (கந்தசாமி கருணாசா-நாசிவன் தீவு,வாழைச்சேனை) வீரவேங்கை பெருமாள் (வில்வன்) சித்திரவேல்-யோசு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கற்பூரம் எடுத்துச்சென்றவர் ராணுவத்தால் கைது

உழவுயந்திரப் பெட்டிக்குள் ரோச் பற்றறி, கற்பூரம், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் முதலானவற்றை மறைத்து வடககே எடுத்துச் சென்றவர்களை சிறிலங்கா ராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

ஈரற்பெரியகுளம் இராணுவ சோதனை முகாமில் நான்கு உழவு இயந்திரப் பெட்டிக்குள் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும்,

இது தொடர்பாக ஆறுபேர் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா நகரில் வசிக்க வதிவிட அட்டை அவசியம்

வவுனியாவில் சிறிலங்கா ராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் ராணுவத்தின் அல்லது பொலிசாரின் நிரந்தர தற்காலிக வசிப்பிட அட்டைகள் இல்லாதோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்என்று அறிவுறுத்தும் சுவரொட்டிகள் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வன்னி ராணுவ தளபதி அறிவித்துள்ளார்.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

ஆயித்தியமலைக்கும் கரடியனாறு என்ற இடத்திற்கும் இடையில் ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகளால் பலநவீன ரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கிகள் - 2
- ★ ரி 81 எல். எம். ஜி. ரக துப்பாக்கி - 1
- ★ ரி 56 - 2 ரக துப்பாக்கிகள் - 7
- ★ ரி 56 - 1 ரக துப்பாக்கிகள் - 2
- ★ ரி 81 - 1 ரக துப்பாக்கிகள் - 4
- ★ காட்லர் தொலைத் தொடர்பு சாதனம் - 4
- ★ சிறிய பைனகுலர் - 1
- ★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் - 3

# தமிழீழ ஆய்வு நிறுவனம்; பெயர் மாற்றம்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணை அமைப்புக்களில் ஒன்றாகச் செயற்பட்டு வரும் தமிழீழ ஆய்வு நிறுவனம் தமிழீழ பொருள்மிய மேம்பாட்டுக் கழகம் [TAMIL EELAM ECONOMIC DEVELOPMENT ORGANISATION,TEEDOR] எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மேற்படி கழகத்தின் பொறுப்பாளர் ரவி அறிவித்துள்ளார்.

தமிழீழப் பொருள் வளங்களை இனம் கண்டு ஆய்வு செய்து முடிவுப் பொருளாக்குவதிலும் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதிலும்தமிழீழ பொருள்மிய மேம்பாட்டிற்கான திட்டமிடல், சந்தைப்படுத்தல், தொழில் நுட்பம், பயிற்சி, வர்த்தகம் எனும் இன்னோரன்ன துறைகளில் வழிகாட்டும் நடவடிக்கையிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அகதிகள் மறுவாழ்வுக் கான சிறப்பு ஆணையாளர் திரு. ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம் தஞ்சமடைந்திருந்தவர்களில் கடந்த மேமாதம் வரை 23126 பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

செஞ்சோலை நிதி சேகரிப்பதற்கென யாழ் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெறும் இந்நிகழ்ச்சிகளை பெருந்தொகையான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

# இந்தியாவின் வழியைப் பின்பற்றி அகதிகளை திருப்பி அனுப்பவுள்ளோம்

## கொழும்பு வந்த சுவிஸ் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

''இந்திய அரசு இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் வகையில் வட-கிழக்கில் சுமுக நிலைமை தோன்றியிருப்பதாக அறிகிறோம். எனவே சுவிற்சர்லாந்திலும் இலங்கையர்கள் அகதிகளாக தங்கியிருப்பதில் அர்த்தமில்லை''

இவ்வாறு இலங்கை வந்துள்ள சுவிற்சர்லாந்து பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். சுவிற்சர்லாந்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்களை திருப்பி அனுப்பும் சாத்தியம் குறித்து ஆராய்வதற்காக மூன்று அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று இலங்கைவந்துள்ளது.அவர்களே இதனைத் தெரிவித்துள்ளனர்.

வதிவிட அனுமதி இல்லாமல் சுவிற்சர்லாந்திற்கு வந்து சேர்ந்த இலங்கையர்களை திருப்பி அனுப்புவதற்கான வழிமுறைகளைப்பற்றி ஆராய்வதே எமது நோக்கமென்றும்,

கட்டம் கட்டமாக 100 முதல் 250 வரையான அகதிகளைத் திருப்பி அனுப்பும் யோசனையுடனேயே வந்துள்ளோம் என்றும் சுவிஸ் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதே நேரம் பிரித்தானிய அரச பிரதிநிதியொருவர் ''பிரித்தானியாவில் அடைக்கலம் கோருவோரின் விடயம் குறித்து இன்னும்ஓரிரு மாதங்களில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட இருக்கிறது'' என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் பிரித்தானியாவில்அகதிகளை திருப்பி அனுப்புவதென்று உடனடியாக முடிவு எடுக்கப்படமாட்டாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஐ.நா.குழு தமிழகம் வருமுன் அகதிகள் வெளியேற்றப்பட்டனர்

(சென்னை)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் சென்னைக்கு வந்து சேரமுன்னமே இலங்கைத் தமிழ் அகதிகளின் ஒரு தொகுதியினர் அங்கிருந்து திருக்கோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் அதிகாரிகள்இலங்கைத் தமிழ் அகதிகள் பூரண சம்மதத்துடன் தமிழ் நாட்டிலிருந்து நாடு திரும்புகிறார்களா என்பதனை அவதானிக்க சென்னைக்கு வர இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டு அரசு சென்னைப் புறநகர் பகுதியிலுள்ள தாம்பரத்தில் இடைக்கால முகாமொன்றை திறந்துள்ளது யு. என். எச். சி. ஆரின் பிரதிநிதி அகதிகள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுகிறார்களா என்பதை இம்முகாமில் வைத்து விசாரித்து தெரிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

டில்லியிலுள்ள யு. என். எச் சி ஆரின் தலைவர் பிரெட்மோகரீம் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றுடன் நேற்றிரவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

**குளம் அமைத்து - நீர் வளம் பெருக்குவோம்**

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கிணற்றுப்பங்குடன் 8 பரப் புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்கு, அல்வாய் [சி/4773]

## வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன்திருத்திக்கொடுக்கப்படும் எம்மிடம் மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம். டில்கா வாச்வேக்ஸ் ஸ்ரான்லி வீதி (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம் (2947)

## மகோற்சவம்

(குருநகர்)

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 12 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகும். (21)

## சொற் பொழிவு

(கொழும்புத்துறை)

யாழ். நல்லூர் சைவ மகா சபையினரால் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்திருக்கும் பிள்ளையார் ஆலயத்தில் மாலை 5.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை தினசரி சிவ. வை. நித்தியானந்த சர்மா ஆசிரியர் 'கந்தபுராண' தொடர் விரிவுரை நிகழ்த்த உள்ளார் எனச் சபையின் பொதுச் செயலாளர் திரு. மு. ஒப்பிலாமணி தெரிவித்துள்ளார்.

வயலின் வித்துவான் திரு. எம். கே. குமாரசாமி தலைமையில் பக்க வாத்தியங்களுடன் சிறப்பாக இந்நிகழ்சி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

★ ★ ★ ★

நல்லைக் கந்தன் திருவிழாக் காலங்களில் நல்லை ஆதினத்தில் தினமும அதிகாலை 5.00 மணிக்கு வீதி பஜனை, காலை 9.00 மணிக்கு சமயதீட்சை, பிற்பகல் 2.00 மணிக்கு கந்த புராண படனம், மாலை 3.00 மணிக்கு முருக இலக்கியங்கள் தொடர் சொற் பொழிவும் நடைபெறவுள்ளது. சொற் பொழிவினை பௌராணிகர் மு. தியாகராசா நடத்துவார்

## நூற்றுக்கு மேற்பட்டோர் தடுத்து வைப்பு

# கைதான மகன் குறித்து தகவல்தர கோரிக்கை

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தனது மகனை விடுதலை செய்யக் கோரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தந்தை ஒருவர் கடிதம் எழுதியுள்ளார்.

கந்தையா சங்கரநாதன் (வயது 25)என்பவர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் 25.01.1991 அன்று வவுனியா விவசாயப் பண்ணைக்கு எதிரே வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்.

தேவகுளம் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞரை விடுதலை செய்யக் கோரி அவரது தந்தையார் கந்தையா என்பவர் வவுனியா பிரிவு இராணுவ தலைமையகத்துடனும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துடனும் ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்ட போது, குறிப்பிட்ட இளைஞரின் கைது பற்றி பொலிஸ் பதிவேட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று கூறப்பட்டதாம். இதன் பின்னர் மகஸீன் தடுப்பு முகாமிற்கு நேரில் தமது மகனைப் பார்க்கச் சென்ற சமயம் அங்கு அவரைக் காணவில்லையாம்.

கடந்த மே மாதம் இறுதிப் பகுதியில் ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது வவுனியா வந்திருந்த ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு தமது கோரிக்கையை அவர் அனுப்பியிருந்தார். அதற்கான பதில் இன்னமும் கிடைக்கவில்லை இராணுவம் தாம் கைது செய்யவில்லை என்று கையை விரித்த நிலையில் குறிப்பிட்ட தந்தையார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தனது மகனை விடுவிக்கக் கோரி கடிதம் எழுதியுள்ளார்.

பிரஸ்தாப இளைஞர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டதை நேரில் கண்டபலர் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (தி)

விமானம் தடுத்துவைப்பு

# மலே. முகவர் நிலையம் மீது எயர்லங்கா வழக்கு

(கொழும்பு)

எயர்லங்கா விமானம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக மலேசியப் பயண முகவர் நிலையம் ஒன்றின் மீது எயர்லங்கா வழக்குத் தொடரவுள்ளது.

நஷ்டஈட்டுப் பிரச்சினை ஒன்று தொடர்பாக எயர்லங்கா விமானமொன்று கோலாலம்பூர் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக மலேசிய உல்லாசப்பயண முகவர் மீது வழக்குத் தொடர எயர்லங்கா முடிவுசெய்துள்ளது.

# குடியேறிய சிங்களவருக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கம்பளை)

புசல்லாவை கொத்சைலட் தோட்டத்தில் புதிதாக காணி பெற்ற சிங்களவருக்கு பொலிஸ் பாதுகாபபு அளிக்கப்பட்டுள்ளது இக் குடியேற்றவாசிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் சிறு குடிசைகளை அமைத்துக் கொண்டுள்ளனர்.

இதேவேளை இக் காணிப் பங்கீட்டைக் கண்டித்து தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# கடன் அடிப்படையில் விதை உருளைக்கிழங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் விதைஉருளைக்கிழங்கு வழங்க தனியார் ஸ்தாபனமொன்று முன் வந்துள்ளது. யாழ் செயலகத்தில் அரச அதிபர் திரு கா மாணிக்கவாசகர் தலைமையில் நேற்று நடைபெற்ற விவசாயக் கூட்டத்தில் இச் செய்தி தெரிவிக்கப்பட்டது

கமநலசேவை உத்தியோகத்தர் தமது பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு தேவையான) விதை உருளைக்கிழங்கு விபரங்களை சேகரித்து மூன்று வாரங்களுக்கிடையில் யாழ் அரசஅதிபருக்கு அனுப்பும்படி வலியுறுத்தப்பட்டது இக் கிழங்குகள் மிக விரைவில் கொழும்பிலிருந்து கப்பல்மூலம் இங்கு கொண்டு வரப்படவுள்ளது. (42)


## தேவை

இலத்திரனியல், தொழில்நுட்ப விஷயங்களைத் தமிழில் மொழிபெயர்க்கக் கூடியவர்களும், பிழை திருத்தி மெருகூட்டி மீட்டெழுதவல்ல தமிழ் ஒப்புநோக்கர்களும், முன்னனுபவத்திற்கு முன்னுரிமை. தராதரப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 165
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திராவீதி,
யாழ்ப்பாணம்.

(சி 4818)


# 1-ம் ஆண்டுநினைவு அஞ்சலி

அன்னை மடியில் 1 - 7 - 1927



இறைவன் அடியில் 18 - 7 - 1991

சின்னத்துரை-இராமுப்பிள்ளை
திதி- 4-08 92 செவ்வாய்க்கிழமை
முன்னாள் அற்புத நந்தன விநாயகர்
நித்திய பூசகரும்
பின் செல்வ பாலவிநாயகர்
ஸ்தாபகரும், பூசகரும் ஆகிய.
அவர்கள்

ஓரானை முகத்தானை உள்ளத் தன்பாய்
ஓர்பதினான் காண்டாக பூசை செய்து
சீராக நின்னகத்தில் செல்வ பால
விநாயகற் கோர்திருக் கோயில் அமைத்துப்
பேராக உலகேத்த வாழ்நாள் முழுதும்
பிரீதியாய்ப் பூசைதனைச் செய்த பெரியோய்
ஓராண்டு மறையும் நாள் நினைக்க வைத்த
உத்தமனே நினைவணக்கம் செய்வோம் யாமே

கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்

— குடும்பத்தினர்

(2946)

# 1 - ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம் 01 - 01 - 1973



வீரச்சாவு 04 - 08 - 1991

## 2 - வது லெப். அசாவேரி

(கனகரத்தினம் ஜானகி)


# "இசைமாலை"

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
"இசைமாலை" நிகழ்ச்சி

இன்று
மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பிலும்
நாளை
அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலியிலும்
நடைபெறவிருக்கின்றன.

காலம்: மாலை 8.30 மணி

**நுழைவுச்சீட்டுக்கள்:**
**100/- 50/- 25/- 10/-**

(சி/4814) -செஞ்சோலை நிர்வாகத்தினர்


# நினைவு கூருகின்றோம் ...
# 1992 - 08 - 04

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -

**அமுதன்** (அரியமுத்து அமுதலிங்கம் - ஈவினை, புன்னாலைக்கட்டுவன், யாழ்)

1987 ஆம் ஆண்டு மன்னார் / பூநகரி 4-ம் கட்டை முகாமில் வைத்து - இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பெயரால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்திற்கு மாறாக சிறிலங்கா இராணுவத்தினரால் கொலைசெய்யப்பட்ட-

★ பிரதேசப் படைத்துறைத் தளபதி -

**தேவா** (மங்களநாயகம் - முல்லைத்தீவு)

★ **குகன்** (செந்தில்குகன் - கைதடி, யாழ்)

திருக்கோணமலை சாம்பல்தீவுப் பகுதியினைச் சுற்றி வளைத்த கறுப்புச்சட்டைக் காரர்களால் படுகொலை செய்யப்பட்ட குழந்தை உட்பட 4 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பரந்தனில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கித்துள் சந்திப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். தம்பிராசா** (த கிருஸ்ணகுமார் - கரடியனாறு மட்டக்களப்பு)

**சுரேன்/ஜிம்போ** (கந்தவேள் குருநாதன் - இருயபுரம் மேற்கு, மட்டக்களப்பு

முல்லைத்தீவு கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சுரேஸ்** (ந.சிவராசா-திருக்கோணமலை)

துன்னாலையில் இந்தியப்படையினருடனான சமரின் போது, விழுப்புண் அடைந்து மருத்துவ மனைக்குச் செல்லும் வழியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**சங்கர்** (குணம் குணபாலன் - கரவெட்டி யாழ்.)

கீரிமலையில், இந்தியப்படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட - நாட்டுப்பற்றாளர்

கரவெட்டியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

## தடுத்து வைப்பு

(வவுனியா)

வடபகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களை கொண்டு செல்ல முயன்றதாக கைது செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மூன்றுமாத காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்து 21 பேர் கடந்த புதனன்று வவுனியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர் என்றும்,

இவர்களில் ஐந்து பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திறப்புக்கோர்வை கண்டெடுக்கப் பட்டுள்ளது

சிவன் பண்ணை வீதியில் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு அண்மையில் திறப்புக் கோர்வையொன்று கண்டெடுக்கப் பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

## முதலாமிடம்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட 'சிக்கன' முறையில் சிறந்த போஷாக்கு கண்காட்சியில் இடம் பெற்ற வினாவிடைப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியைச் சேர்ந்த மாணவி ம விநோதா முதலிடத்தைப் பெற்றார். இலைச்சம்பல் இலைச்சுண்டல் தயாரிக்கும் போட்டியில் இதே கல்லூரியை சேர்ந்த மாணவி செல்வி வி. சுந்தரவல்லி முதலாமிடத்தை பெற்றுள்ளார். (24)

கமநலசேவை உத்தியோகத் ளது. (42)

## கவாஸ்கர் தலைமையில் சர்வதேச குழு வருகிறது

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் சர்வதேச கிரிக்கெட் குழுவுக்கும் இலங்கை போட் பிரசிடன்ட் குழுவுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டிகள் கொழும்புகெத்தாராம விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது.

8ஆம்திகதி நடைபெற இருக்கும் விளையாட்டு நிகழ்ச்சியின் குழுவுக்கு ரோய் டயஸும் 9 ஆம் திகதிய நிகழ்ச்சிக்கு அர்ஜுனா ரணதுங்காவும் தலைமை தாங்க உள்ளனர்.

இச் சர்வதேச குழுவுக்கு இந்தியாவைச் சார்ந்த சுனில் கவாஸ்கர் தலைமை தாங்குகிறார்.

இச்சர்வதேச குழுவில் இந்தியாவைச் சேர்ந்த கபில் தேவ், மொகமட் அசாருதீன். டிலிப் வெங்சாகர், கிரான் மோரே. மனோஜ் பிரபாகர், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டீப்வாப், நியூசிலாந்தைச் சேர்ந்த ரொட்லெதம், மேற்கு இந்திய தீவுகளைச் சேர்ந்த பிரையன் லாரா, பாகிஸ்தானைச் சேர்ந்த அப்துல் குலாதிர், தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த பீட்டன் கேர்ஸ்டன், கிளிவ்ரைஸ் ஆகியோரும் விளையாடுகின்றனர்.

பிற்பகல் இரண்டு மணி முதல் இரவு பத்து மணி வரை போட்டிகள் நடைபெற உள்ளன.

உ

ஓம்

குருவே துணை

## 7 ஆம் ஆண்டு குருபூசை

## 04 - 08 - 92

## அமரர் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி

(ஆனந்தாச்சிரமம் செல்வச்சந்நிதி தொண்டமானாறு)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி, ஆனந்தாச்சிரம ஸ்தாபகரான அமரர் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின் குருபூசை 04-08-92 (செவ்வாய்க்கிழமை) இன்று அவர்களின் சமாதியுள்ள இடமான ஆனந்தாச்சிரமத்தில் நடைபெறும் என்பதை அன்பர்கள் அடியார்களுக்குஅறியத் தருவதுடன் குருபூசையில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இங்ஙனம்

கோபாலுசிறியம்பகமூர்த்தியும் ஆச்சிரம சீடர்களும்

ஆனந்தாச்சிரம நிர்வாகி

(2922)

(கனகரத்தினம் ஜானகி)

தாய் திரு நாட்டின் விடிவே
தன் விடிவென - வீறிட்டெழுந்து
அருஞ்சமர் புரிந்து - கொடி
அரக்கரை வீழ்த்தி
ஆனை இறவுப் போரில்
அழியாப் புகழுடம் பெய்தி
சாதனை படைத்த
(அ) சாவேரியே - நின்
கனவினை நாங்கள்
காண்பது எப்போ!

குடும்பத்தினர், நண்பர்கள்.


கோழியகுளம், ஓமந்தை.

(2847)

## 1ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்

24
—
12
—
1977



தாயக மண்ணில்

03
—
08
—
1991

## வீரவேங்கை இன்பம்

(நடராசா றஞ்சித்குமார்)

வதைக்கின்ற எதிரியை
மிதிக்கின்ற உணர்வோடு
இன்பம் நீ பள்ளியை மறந்தாய்
நண்பரை மறந்தாய் அது மட்டுமா
உன் உறவை மறந்தாய்
ஆனையிறவில் வீரகாவியம் எழுதினாய்
நினைக்கும் போது நின் சாதனைகண்டு
வியக்குதையா!

ஆனையிறவில் வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

உனது நினைவால் துயருறும்
அம்மா, அண்ணாமார்
தங்கா, வாணி.

சாவகச்சேரி.

(2925)

லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வவுனியா - மாமடு முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் விளாத்திக்குளம் பகுதியில் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**ஜெசி** (வவுனியா)

**விபுலானந்தன்** (இராமசாமி இராசகுமார் - வவுனியா)

**றோகான் / குகன்** (வீரகத்திப்பிள்ளை குகதாசன்- கேணிக்குளம் ஒழுங்கை, இருபாலை கிழக்கு, கோப்பாய்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் பெண், ஆசிரியர் உட்பட வந்தாறுமூலையைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

திருக்கோணமலை - உப்பாற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளம்பெண்.

யாழ். மத்தியூஸ் வீதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கேதீஸ்** (சுப்பிரமணியம் விஜயதாசன் - பொன்னாலை தெற்கு, சுளிபுரம்)

**நிசாந்தன்** (இளையதம்பி பிறேமசிறி 39, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்.)

**உதயன்** (முருகேசு குமாரசாமி - 64, மண்டூர்-3, மட்டக்களப்பு)

**தர்மிளா** (கௌரி கனகு - செல்வபுரம், உரும்பராய் தெற்கு)

**மதிவாணன்** (தர்மலிங்கம் தனேஸ்வரன் - மல்லாகம் வீதி, சங்கானை)

**சகுந்தலா** (மேரி எமில்டா வில்லியம் மரியதாஸ் - கேணிக்கட்டு ஒழுங்கை, கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4815]

## சிந்தனைக்கு

அந்தோ! அந்தக் காலம் நம்மைக்
கனவினுள் கடத்திச் செல்கிறதே!
- ஜேம்ஸ் கேஸிடி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## எதிர்காலக் கனவு

"மக்கள் அபிலாசையை ஈடுசெய்யக்கூடிய ஒரு ஜனாதிபதி வேட்பாளராக நான் போட்டியிட முன் வருவதால் இந்நாட்டின் எதிர்க்கட்சிகளின் முழு ஆதரவும் எமக்கே நிச்சயம் கிடைக்கும்" இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார். உலகின் முதல்பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவாகி 32 வருடங்கள் பூர்த்தியாவதையிட்டு அத்தனகலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டது போல், மக்கள் அபிலாசையை ஈடுசெய்யக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர் என்பது தமிழ் மக்களைப் பொறுத்து ஒரு போதும் பொருந்தாது. தமிழ் மக்கள் இப்பொழுது எந்தவொரு சிங்களத் தலைவர்கள் மீதும் நம்பிக்கை கொள்ளத் தயாராக இல்லை. ஏனெனில் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் அவர்களில் எவரும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து கொண்டவர்களாகவோ அன்றிப்புரிந்து கொள்ள முற்படுபவர்களாகவோ இல்லை.

தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதோ, அன்றி அதனைப் பெறுவதோ ஒரு புறம் இருக்க, சிங்கள எதிர்க்கட்சிகளின் ஆதரவை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒட்டுமொத்தமாக பெறக் கூடிய நிலையில் இருக்கின்றதா என்பதும் கேள்விக்குரியது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள் இன்றுபெரும் அதிகாரப் போட்டியும் குழப்பமும் நிகழ்ந்து வருகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுராபணடார நாயக்காவிற்கும் அத்தனகலைத் தொகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சந்திரிகா குமாரணதுங்காவிற்கும் இடையில் அதிகாரப் போட்டி உச்சக்கட்டத்தில் உள்ளது, கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா சந்திரிகா குமாரணதுங்காவுக்கு சார்பாக இருந்து வருகின்றார் இதேவேளை அநுராபண்டாரநாயக்காவோ கட்சித் தேர்தலை நடத்துமாறு கோரிவருகின்றார். அதாவது தாய் - மகள் - மகன் ஆகியோருக்கு இடையிலான பாகப்பிரிவினை கட்சிக்குள்ளும் இடம்பெற்றுவருகின்றது.

# பேரிழப்பைத் தவிர்க்க முடியாது

# சிறிலங்கா இராணுவம் திணறுகிறது

விடுதலைப் புலிகள் திடுதிப்பென நடத்தும் மின்னல் வேகத் தாக்குதல்களில் இழப்புக்கள் ஏற்படாமல் சமாளிப்பது எவ்வாறு என்பதே அண்மைக் காலத்தில் இராணுவ அதிகாரிகளை உலுப்பும் கேள்வியாக உள்ளது. விடுதலைப் புலிகள் தாக்கிவிட்டுத் தப்பியோடுவது என்ற வகையில் கடைப்பிடிக்கும் போர்த்தந்திரம் கொடூரம் மிக்கதாகவே இன்னமும் இருக்கின்றது. காலாட்படையை நடத்திச் செல்லும் அதிகாரி ஒருவர் பின்வருமாறு முறையிடுகின்றார்.

அவர்கள் மிகக் கவனமாகத் திட்டமிடுகிறார்கள். இராணுவத்தினர் இயல்பாக நடமாடுவதை நன்கு அவதானிக்கின்றனர். அதன் பின்பு கண்ணிவெடிகளைப் புதைக்கின்றனர். சுமார் பத்து யார் தூரம் நெருங்கும் வரை காத்திருந்து வெடிக்க வைக்கின்றனர். ஐந்து செக்கன்களுக்கு இடையில் துப்பாக்கி வேட்டுக்களை தீர்க்கின்றனர். படையினர் பதிலடி தருவதற்குப் பத்து செக்கன்கள் வரை எடுக்க வேண்டி இருக்கின்றது. ஆனால் விரைவிலேயே தமது பணிகளை முடித்துவிடும் அவர்கள் பத்து நிமிடங்களில் அவ் இடத்தை விட்டுப் பின்வாங்கி விடுகின்றனர். மீட்புப் படையினர் வந்துசேரும்போது அவர்களைக் காண முடிவதில்லை.

கஷ்டங்களை எதிர்த்துப் போரிடும் காலாட் படையினர் தனியாக ரோந்து சுற்றும் போதும், சிறிய அளவில் குழுவினராக செல்லும் போதும் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். அநேகமான தருணங்களில் இராணுவத்தினர் தமது துப்பாக்கிகளை உயர்த்திக் குறி பார்த்துச் சுடுவதற்கே சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. போதியபயிற்சியின்மை, கவனயீனம், ஊக்கமளிக்காத ஒரே மாதிரியான தேகப்பியாசங்கள், அதனால் எழும்புகின்ற உதாசீனங்கள் என்பன இத்தகைய திடீர்த் தாக்குதலின் போதான இழப்புக்களை இரண்டு எண்கள் உடையவையாககுகின்றன.

கடந்த வாரம் மட்டக்களப்பில் நடந்த தாக்குதலின்போது படையினரும் பொலிசாரும் கூட்டாகஒரேகும்பலாகச்சென்றதாகத் தெரிய வருகிறது. ஈழப்போர் தொடங்கியபோது ஆரம்பம் முதலே போர்க்களப் பயிற்சியில் ஒவ்வொருவருக்கும் இடையே குறிப்பிட்டளவு தூரம் இடைவெளி இருக்க வேண்டும் என்பது படையினருக்குப் போதிக்கப்பட்டே வருகின்றது. இவ்வாறு செய்தால் தம்மைத் தாக்கும் குழுவை இனம் கண்டு தாக்கக் கூடிய நிலையில் படையினர் இருக்கலாம். அவ்வாறில்லாததால் நேரும் இத்தகையஇழப்புக்கள் இராணுவத்தால் ஈடுசெய்ய முடியாதவை. வடக்கில்பெறும் வெற்றிகள் கூட கிழக்கில் நேரும் இழப்புகளால் மறைக்கப்பட்டு விடுகின்றன. இராணுவத்தினரின் ஆட் பற்றாக் குறையைப் போக்கும் ஒரு முயற்சியாக ரோந்துகளின் போதுபொலிசாரும் பயன்படுத்தப்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. வண்ணான்குளம் முகாம் மீதான தாக்குதலில்படையினருக்கு பெருமளவுஇழப்புநேரிட்டமைக்கு அனுபவமில்லாத துணைப்படையிலிருந்து ஆட்கள் திரட்டப்பட்டதும் ஒரு காரணமாகும்.

வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்ட போது, தரைக்கட்டுப்பாட்டை பேண கடற்படை, விமானப் படை ஆகியவற்றின் உதவியையும் அனுசரணையையும் இராணுவம் பெறவேண்டியுள்ளது. ஆனையிறவுக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடைப் பட்ட பாதுகாப்பு வலையத்தைப் பேணுவதற்கு மட்டும் ஆறு பட்டாலியன்துருப்புக்கள் தேவைப்படுகிறது. எனினும் இந்த இடத்தை இராணுவம் இலகுவில் கைவிட முடியாது வடக்கில் இராணுவத்திற்கு பேரிழப்பு என்று கருதப்படக் கூடிய சில பகுதிகள் புலிகளிடம் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்காக பதுங்கு குழிகளில் மனித ஆற்றலை முழுமையாகப் பயன் படுத்த வேண்டியுள்ளது. இந்தப் பதுங்கு குழிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி வெற்றிடம் ஏற்படுமானால் முகாம்களை தாக்கக்கூடிய அளவுக்கு புலிகள் முன்னேறி வருவார்கள்.

> "விடுதலைப் புலிகள் நடத்தும் திடீர் தாக்குதல்கள் - இராணுவம் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை" என்னும் தலையங்கத்தின் கீழ் ஆகஸ்ட் இரண்டாம் திகதிய ஐலண்ட் வார இதழில் ரோஹான் குணசேகர எழுதியுள்ள பகுதியின் மொழியாக்கம் இது.

அண்மையில்விடுத்த அழைப்புக்கேற்ப இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் பற்றி இராணுவ அதிகாரிகள் அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. 18—25க்கும் இடைப்பட்ட வயதுத் தரத்தினரின் ஆற்றல் அதிசயிக்கப்படத்தக்க வகையில் வெகு குறைவாக இருப்பதாக அந்த அதிகாரிகள் கூறுகின்றனர். இப் புதியவர்களை மிகக் கடுமையான பயிற்சிக்கு உட்படுத்திய பின்னரே அவர்கள் வேண்டப்படும் ஆகக்குறைந்த தகைமைகளைப் பெறுகின்றனர். சில அரசியல் வாதிகள் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவதற்கு தமது செல்வாக்கைப் பிரயோகிக்கும்படி கோரும் எவரும் இப்போதில்லை என்றும், யுத்தத்தைப்பற்றிய கவலை மக்களிடம் பரவியிருப்பதற்கு இது ஒரு குறிகாட்டி என்றும் கூறுகிறார்கள். ஏற்கனவே இராணுவத்தில் இழப்புக்களாலும், காயமடைந்தவர்களாலும், தப்பியோடியவர்களாலும் ஏற்பட்ட பெரிய இடைவெளி நிரப்பப்படாமலேயே உள்ளது

## புலிகளின் மின்னல்வேக அதிரடியில் பதிலடிக்கு அவகாசம் கிடைப்பதில்லை

யாழ்ப்பாணத்தின் மையப் பகுதியில்வெற்றிகரமானதாக்குதல்களை ஆரம்பிப்பதற்கு முன்பாக இராணுவத்தினருக்குப் பயிற்சி விரிவாக்கப்பட வேண்டியிருக்கும். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் முடிவுறாத கட்டடங்களும், கதவுகளும், யன்னல்களும் மறைந்துதாக்குவதற்கு வசதியான அமைப்புகள் பரவலாக இருப்பதாக இராணுவக் கமாண்டர்கள் கூறுகின்றனர். இத்தகைய பகுதியில் படையினர் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது மிகக் கடினமாகும். பிரிவுக் கமாண்டர்களும், பிளாட்டூன் கமாண்டர்களும் முழுப்பலத்தையும் பிரயோகித்த போதும் தமது தலைமையின் தேவைக்கேற்றவகையில் இப் பகுதியில் முழுக்கட்டுப்பாட்டையும் பெற முடியவில்லை.

விடுதலைப்புலிகள் கடந்த சில மாதமாக டாங்கி எதிர்ப்பு பயிற்சி பெறுவதோடு. பதுங்கு குழிகளை அமைத்தும், கடற்கரைகளில் கண்ணிவெடிகளை புதைத்தும் பாதுகாப்பு படையினர்மேற்கொள்ளக்கூடிய தாக்குதலை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றனர். அத்துடன் தரையிலிருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைகளைப் பெறுவதிலும்அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இத்தகைய சாம் ஏவுகணைகளை அவர்கள் பெற்றுவிட்டால் விமானப் படையின் நடவடிக்கை பாதிக்கப்படுவதோடு, தரைப்படையையும் அதுவலுவாகப்பாதிக்கும். சாம் ஏவுகணைகள் பயன்படுத்தப் பட்டால் இந்தப் போரில் தொழில் நுட்ப முறையான பகுதி அறிமுகமாக்கப்படுவதோடு, விமானப்படைதரைப் படைக்கு உதவுவதும் கடினமானதாகிவிடும்

### திரிபுராவில் புகலிடம் பெற்ற

# சக்மா அகதிகளை அனுப்ப டில்லி நடவடிக்கை எடுக்கும்

(டில்லி)

1986 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் திரிபுரா மாநிலத்தின் பல்வேறு முகாம்களிலும் தங்கியிருக்கும் சுமார் 53,000 சக்மா பழங்குடி அகதி

ள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அகதிகளின் பட்டியல் ஏற்கனவே மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பங்களாதேஷ் பிரதமர் காலிதா ஸியா மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போதே இதற்கு இணக்கம் காணப் பட்டது.

இது தொடர்பாக இரு

## தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக வேலை நிறுத்தம்

(கண்டி)

கிளனூர், அம்பிட்டி கந்த, சங்குவாரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகளை ஆட்சேபித்தும் தோட்டத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை,

பொதுச் செயலாளரும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைகள் சம்பந்தமாக அந்தந்த தோட்டங்களைச் சார்ந்த கம்பனிகளுடன்பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி மேலும் தெரிவித்தார்.

அதிகாரப்போட்டி ஒருபுறம் இருக்க ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் பதினைந்து வருட ஆட்சியினால் உருவாக்கியுள்ள பிரச்சினைக்கு தீர்வுளதையும் சிறிலங்காசுதந்திரக்கட்சி இதுவரை முன்வைக்கவில்லை. உலகில் கம்யூனிசக் கொள்கையின் நடைமுறையும் அதனடிப்படையில் உருவாகிய மூடப்பட்ட பொருளாதார அமைப்பும் தோல்வியடைந்துள்ள நிலையிலும், அநேக நாடுகள் பொருளாதாரக் கொள்கையை மாற்றி அமைத்துள்ள நிலையிலும் கடந்த காலத்தில் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையை முன்வைத்திருந்த சுதந்திரக்கட்சி இதுவரை தனது பொருளாதாரக் கொள்கையை அறிவிக்கவில்லை. அநுராபண்டார நாயக்கா போன்றவர்கள் தற்போதைய திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு வெளிப்பாடாக ஆதரவு அளிக்கின்ற போது அதை கட்சி தனது கொள்கையாக பிரகடனப்படுத்தவில்லை.

இதேபோன்று, இலங்கையின் முக்கிய பிரச்சினையாக உள்ள தமிழர் தேசிய இனப்பிரச்சினை குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி இன்னமும் தமது நிலைப்பாட்டை வெளியிடவில்லை. மேலும்' ஹெல உறுமய' என்னும் இனவாத போக்குடைய அமைப்பொன்று கட்சிக்குள் உருவாக்கப்பட்டு பௌத்த பேரினவாத சக்திகளால் வளர்க்கப்பட்டு வருகின்றது. இதன் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாது கட்சியின் தலைமை தடுமாற்றம் அடைந்துள்ளது.

அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமைத்துவபோட்டியினுள்ளும்கொள்கைமுரண்பாட்டினுள்ளும் சிக்கித் தவிக்கின்றது. இதனை நிவர்த்தி செய்ய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையினால் முடியவில்லை. இந்நிலையில் தன்னை ஜனாதிபதித்தேர்தலில் எதிர்கட்சிகளின், பொது வேட்பாளராக சிறிமாவோ பண்டார நாயக்கா எண்ணுவது எந்தளவிற்குப் பொருத்தப்பாடானது என்பது கேள்விகுரியதே. அதாவது தனது கட்சிக்குள்உள்ள முரண்பாட்டை நிவர்த்தி செய்து, புதிய கொள்கைத்திட்டங்கள் வகுத்து கட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாதவரை ஏனைய எதிர்கட்சி தலைவர்கள் எந்தளவிற்கு ஏற்றுக் கொள்வார்கள் என்பதும் சிங்கள மக்கள் அங்கீகரிப்பார்கள் என்பதும் சர்சைக்குரிய ஒன்றே.

---

53,000 சக்மா பழங்குடி அகதி மக்களையும்பங்களாதேஷிற்கு திருப்பி அனுப்ப தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என திரிபுரா முதல்வர் சுமிர் ரஞ்சன் பர்மன் நம்பிக்கை வெளியிட்டு வும் தெரிவித்தார்.

சக்மா அகதிகளைக் கட்டம் கட்டமாக திருப்பி ஏற்றுக் கொள்வதற்கு பங்களாதேஷ் அரசு ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருக்கின்றது. இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன்

## காபூலில் குண்டு வெடிப்பு மேஜர் ஜெனரல் ஒருவர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் மேஜர் ஜெனரல் குலாம் ரசூல் பர்வாளி உயிர் இழந்தார்.

அவரது மெய்க்காப்பாளர் மற்றும் கார்ச்சாரதி ஆகியோரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டு உள்ளனர் இதையடுத்து காபூல் நகரின் மீது இருபதுக்கும் மேற்பட்ட றொக்கட்குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளது.

## தெ. ஆபிரிக்காவில்வன்முறை பதின்மூன்று பேர் உயிரிழப்பு

(ஜோகனஸ் பேர்க்)

தென் ஆபிரிக்காவில் பல பகுதிகளிலும் நேரிட்டுள்ள வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவுகின்றது என்றும் இந்த வன்முறைச் சம்பவங்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரசும் அதனுடைய நேசக் கட்சிகளும் நேற்றும், இன்றும் வேலை நிறுத்தத்தை அனுசரித்து வருகின்றன. இதனை அடுத்து ஆட்சேப ஊர்வலங்களும், போராட்ட ஆர்ப்பாட்டங்களும்நடைபெற்றன. இதன் பின்பே வன்முறைகள் அங்கு மூண்டுள்ளன.

இதே நேரம் வேலைநிறுத்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளைக் கண்காணிக்கப் பத்து உறுப்பினர்களைக் கொண்ட ஐ. நா. குழுவொன்று அங்கு சென்றுள்ளமை தெரிந்ததே.

## அடுத்த அறிவித்தல் வரை பாப்பரசர் ஓய்வெடுக்கிறார்

(வத்திக்கான்)

சத்திரசிகிச்சைக்குஉள்ளான பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மறுஅறிவித்தல் வரை பொது வைபவங்களில் கலந்து கொள்வதில்லை என தீர்மானித்திருப்பதாக பாப்பரசரின் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த பதின்மூன்று தினங்களாக சத்திர சிகிச்சையின் பொருட்டு வைத்தியசாலையில் தங்கியிருந்த பாப்பரசர் கடந்த செவ்வாய் அன்று ரோமாபுரியில் உள்ள தனது பிரத்தியேக வாசஸ்தலத்திற்கு சென்றார்.

தற்போது 72வயதை அடையும் பாப்பரசருக்கு ஒகஸ்ட் மாதம் முழுவதிலும் ஓய்வு அவசியம் என்று டாக்டர்கள் வலியுறுத்தியிருப்பதன் காரணமாக அவர் பொது வைபவங்களிலும் பிரத்தியேக சந்திப்புகளிலும் கலந்து கொள்வதில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளதாக அப் பேச்சாளர் கூறினார்.

---

இது தொடர்பாக இரு நாட்டு அதிகாரிகளினதும் உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் இறுதி முடிவு காணப்பட்டுள்ளது. இதன்படி அகதிகளைத் திருப்பி அனுப்பும் வேலைகள் ஓகஸ்ட்மாத இறுதியில் அல்லது செப்டெம்பரில் ஆரம்பமாகும்.

இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக பதினொரு பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் சக்மா அகதிகளின் தாயகமான சிட்டகொங் மலைப் பகுதியைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், அகதிகளின் பிரதிநிதியாக மூன்று பேரும் இரண்டு அரசாங்கங்களையும் பிரதிநிதிப்படுத்தும் ஐந்து அதிகாரிகளும் அடங்கியுள்ளன.

1986 ஏப்ரல் 30ஆம் திகதி பங்களாதேஷின் ஆயுதப்படைகளாலும், மீளக் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்களாலும் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து சக்மா மக்கள் அகதிகளாக இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் தஞ்சம் அடைந்தனர்.

இதன் மூலம் சுமார் 70,000 பேர் வரையில் இந்தியாவில் தஞ்சம் அடைந்தனர். 17,000 பேர் அதன்பின்னர்அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளனர். மீதமாகவுள்ள 53,000 பேர் ஒப்பந்தப்படி திருப்பி அனுப்பப்பட வுள்ளனர்.

---

## விமான விபத்து

(வாஷிங்டன்)

நியூயோர்க் விமான நிலையத்திலிருந்து 300 பயணிகளுடன் புறப்பட்ட ஜெட் விமானமொன்று தரையுடன் மோதி தீப்பிடித்துக்கொண்டது.

ஆனால் பயணிகள் அனைவரும் உயிர் பிழைத்துக்கொண்டனர். 18 பேர்மட்டுமே சிறு காயங்களுக்குள்ளாகினர்.

---

தோட்டங்களின் வேலை அளவு கூட்டப்பட்டமை ஆகியவை நடைபெறுவதினாலேயே இவ்வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

---

## விரிவுரைகள்

[யாழ்ப்பாணம்]

உப்சலா பல்கலைக் கழகத்தின் சமய வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பீற்றர் ஷால்க்கின் விரிவுரைகள் இரண்டு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

''தமிழ்ப் பௌத்தத்தின் கலைப்பேறு'' ''இலங்கையிலும் கம்போடியாவிலும் இந்தியக்கலை'' என்றதலைப்புகளில் வணிக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் முறையே இன்றும் நாளையும் காலை 9.00- 11.00 மணி வரை நடைபெறும்.

## இன்று

நல்லூர் உற்சவ கால இசை நிகழ்ச்சியில் தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் பக்திப் பாடல்களை இசையரசு சாந்தன் அவர்களும், பார்வதிசிவபாதம்அவர்களும் பாட உள்ளனர். இவர்களுக்கான பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் ஆர். எஸ். கேசவமூர்த்தியும், மிருதங்கம் ஐ சிவபாதம் அவர்களும் பங்குபற்ற உள்ளனர்.

★ ★ ★

வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின் கீழ் தொழில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறி நடைபெறும் பாடசாலை அதிபர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்குயாழ். கல்வித்திணைக்கள கருத்தரங்குமண்டபத்தில் நடைபெறும். அவ்வப் பாடசாலை அதிபர்களை தவறாது சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றனர்.

---

## ஆங்கில தின விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சென் தோமஸ் மகளிர் வித்தியாலய ஆங்கிலதினவிழா, வித்தியாலய அதிபர். வணக்கத்திற்குரிய சகோதரி மேரிலொரென்றீனா தலைமையில் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிலே வடமராட்சி கல்விக் கோட்ட ஆங்கில கல்வி ஆலோசகர் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இவ்விழாவிலே ஆங்கில குழுப்பாடல், ஆங்கில அபிநயப் பாடல், ஆங்கில நாடகம் உட்பட இன்னும் பல ஆங்கில நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஆங்கிலதினப் போட்டிகளிலே வெற்றியீட்டிய மாணவிகளுக்கு திருமதி ஜெயபூபதி குலசிங்கம் சான்றிதழ்களை வழங்கினார். விழாவிலே வண. தந்தை அன்டன் ஜோர்ஜ், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. வின்சென்ற்டீபோல் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஆங்கில பொறுப்பாசிரியை திருமதி. டி. அல்வின்ஸ் நன்றியுரை கூறினார். (25)

## நுண்கலை பரீட்சை

1991 - 92 கல்வியாண்டுக்கு இசைக்கலைமாணி, நாட்டியக் கலைமாணிக்கான அனுமதித் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறுமென தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சார்த்திகள் சகல ஆவணங்களுடனும் சமுகம் தர வேண்டுமென கோரப்பட்டுள்ளது இதேவேளை எக்காரணம் கொண்டும் பிறிதொரு நாள் பரீட்சை இடம் பெற மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

ஈழநாதம்

## “தமிழ்ச் சோலை” இலக்கியப் போட்டி முடிவுகள்

(ரொரன் ரோ)

கனடாவில்இயங்கும் தமிழ்ச் சோலையின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அகில உலக ரீதியில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

நாடகப் பிரதி ஆக்கலில், இரிசி ப்ரபஞ்சன் எழுதிய ‘நம் நாடகம்’ முதலிடத்தையும், திருமலை நவம் எழுதிய ‘விடிபொழுது கனவுகள்’ இரண்டாம் இடத்தையும், அந்தோனிமுத்து எழுதிய ‘பூனையும் எலிகளும்’ மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

கவிதைப் போட்டியில் தாமரைத் தீவானின் ‘மீட்டும் நோக்கே’ கவிதை முதலிடத்தையும், பொன். சிவானந்தனின் ‘கோலம் அமைக்காத கோடுகள்’ இரண்டாமிடத்தையும், செ. குணரத்தினத்தின் ‘நான் பாட அடியெடுத்துத் தா இறைவா’ மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன

சிறுகதைத் துறையில் தில்லையடிச் செல்வன் எழுதிய ‘துப்பு’ முதலிடத்தையும், பாலநடராசன் எழுதிய ‘வீடு’ இரண்டாமிடத்தையும், திக்குவல்லை கமால் எழுதிய ஒரு பூமாலை தயாராகிறது’ மூன்றாமிடத்தையும் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுதசாலையில் விபத்து 3 பேர் பலி; 50 பேர் காயம்

(டெல்அவிவ்)

டெல்அவிவிற்கு வெளியேயுள்ள அரச ஆயுத உற்பத்திச்சாலையொன்றில் றிமோல் கொன்றோல் ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்த போது ஏற்பட்ட பாரிய வெடிவிபத்தில் மூவர் கொல்லப்பட்டதாகவும் 50 பேர் வரையில் காயமடைந்ததாகவும் கடந்த வியாழனன்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வெடிவிபத்தால் இஸ்ரேல் கைத்தொழில் பேட்டைக்கு மேலாக ஒரு மைலுக்கு புகை மண்டலமாக இருந்தது மீட்புத் தொழிலாளர் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்டெடுப்பதில் ஈடுபட்டுள்ளனர் சுமார் 500 வீடுகள் வரையில் இவ்வெடிவிபத்தால் சேதமடைந்துள்ளன.

நிலத்துக்கடியிலுள்ள பங்கர் ஒன்றில் சேமித்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகளினாலேயே இவ்விபத்தேற்பட்டதென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க வைத்திய சங்கத்தின்

## வேலைநிறுத்தத்தைஎதிர்த்து தமிழக அரசு நடவடிக்கை

(சென்னை)

தமிழகத்தில் சிறிராமச்சந்திராவைத்தியக் கல்லூரியை அரசாங்கம் தன்னுடைய பொறுப்பில் மேற்கொள்ளவேண்டும் என்று கோரி அரசாங்க வைத்தியர் சங்கம் மேற்கொள்ளவிருக்கும்காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தைஎதிர்த்து தமிழக அரசு புதிய டாக்டர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளப்போவதாக எச்சரித்துள்ளது.

மாநில சுகாதாரத்துறை அமைச்சர் என்.முத்துசாமி நேற்று சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக தமது பணிகளுக்கு செல்லாமல் இருக்கும் மருத்துவர்களுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

## அயோத்தி ஆவணங்களுக்கு தனிப்பிரிவு அமைக்கப்படும்

## ஹெல உறுமய குழுவினர் இனவாதிகள் ஆவர் - சந்திரிகா

(கொழும்பு)

ஹெல உறுமய குழுவினர் மீண்டும் எமது நாட்டில் தென்பகுதியில் இனவாதத் தீயினை மூட்டுவதற்கு எத்தனித்து வருகின்றனர். இது மிகவும் ஆபத்தான செயல் என்று திருமதி சந்திரிகா குமாரரணதுங்க கூறியுள்ளார்.

ஹெல உறுமய குழுவினர் தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடு சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சிகள் ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் எதிர்வரும் வெள்ளியன்று சந்தித்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாகவும் ஆராய உள்ளனர்.

இத் தகவலை கொழும்பில் எதிர்க்கட்சி வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்காவின் ‘றோஸ்மெட் பிளேஸ்’ இல்லத்தில் சடந்த புதனன்று சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர்கள் பல்வேறு கூட்டு நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் சார்பில் ஒரு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்து வெளியிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர் மகிந்த ராஜபக்ச, ஒரு பொது முடிவுக்கு எதிர்க்கட்சிகள் வருமாயின், யுத்தம், வடகிழக்கு இணைப்பு, பொருளாதாரம், தோட்டத்தொழில் ஆகியவற்றில் பொது நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ளப்போவதாக தெரிவித்தார்.

## ஐ. தே. கட்சி அரசாங்கம் தேர்தலுக்குத் தயாராகின்றது

(கொழும்பு)

அமெரிக்க குடியரசுக் கட்சியின் உயர் அதிகாரி ஒருவர் கடந்தவாரம் கொழும்புக்கு வந்ததையடுத்து ஐக்கியதேசியக்கட்சி தேர்தலுக்குத் தயாராவதாகக் கொழும்பில் பலத்த வதந்தி உலாவுகின்றது.

ஐ. தே. க. வின் அழைப்பை ஏற்று கொழும்பு வந்துள்ள முன்னாள் காங்கிரஸ் உறுப்பினரான ஜக்புஷ்னர் தற்போது தேசிய குடியரசு நிறுவனத்தில் பணிபுரிந்து வருபவராவார். எனினும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரகமோ, அமெரிக்க ராஜாங்க அமைச்சோ ஜக்புஷ்னரின் விஜயத்தோடு தொடர்பு கொண்டிருக்கவில்லை என்று தூதுவரக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஆனால் கொழும்பில் ஐந்து நட்சத்திரஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த புஷ்னர் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரோடு அமெரிக்கத் தூதுவரகத்துக்கும் விஜயம்செய்ததாகத் தெரியவருகின்றது.

## ‘ஹெலஉறுமய’வுக்கு தடை சிறிமா எச்சரிக்கை

(கொழும்பு)

கட்சியின் நலன்களுக்கு எதிராகப் ஹெலஉறுமய நடந்து கொள்ளுமானால் அந்த அமைப்பு தடைசெய்யப்படும் எனவும் அந்த அமைப்பில் இருக்கும் உறுப்பினர்களுக்கு எதிராகஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா எச்சரித்துள்ளார்.

ஹெலஉறுமயவின் நடவடிக்கைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு சிங்கள, பௌத்த குறுகிய மனப்பான்மையுடைய ஒரு கட்சியென கருதக்கூடிய அளவுக்கு அமைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் நலன்களுக்கு எதிரான இந்நடவடிக்கைகளை தடுக்க சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் முயற்சிகள் பயனளிக்காத இடத்து அமைப்பு தடைசெய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

“குமண...”

## மண்டபம் முகாம் அகதிகள் பலவந்தமாக வெளியேற்றம்

(சென்னை)

மண்டபம் அகதிமுகாமில் உள்ள 148 தமிழ்க் குடும்பங்கள் வலுக்கட்டாயமாகவெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த இந்துஸ்தான் முன்னணி இச்செயலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது

இம்முகாமிலிருந்த 148 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகளை இடைக்காலமுகாமிற்கு அனுப்புவதற்கு மண்டபம் அகதி முகாமிற்குப் பொறுப்பாக உள்ள விசேட துணை அதிகாரி டி. ரங்கசாமி அவர்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியதாகவும் இம்முன்னணி தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது.

ஆண்கள் முகாமில் இல்லாத வேளைகளில் பெண்களை மிரட்டிய அகதிமுகாம் அதி... கொண்டுவரப்பட்ட அகதி ஒருவர் தெரிவித்தார். இவ்விவகாரத்தையும் என்.சி எச் ஆரின் கவனத்திற்குக் கொண்டுவரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இராமநாதபுரத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 32 அகதிகளிடம் இலங்கை திரும்ப சம்மதம் தெரிவித்து விடுங்கள் அல்லது தொடர்ந்து சிறையில் இருக்கவேண்டிவரும் என அதிகாரிகள் மிரட்டியதாக சிவகுரு என்னும் அகதி...

## வீரச்சாவு

நித்தியவெட்டைப் பகுதியில் 27 - 07 - 92 அன்று சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும்...

## ஒலிம்பிக்போட்டிகள் - 1992

பார்சிலோனாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 25ஆவது ஒலிம்பிக் போட்டியில் இதுவரை கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி தங்கப்பதக்கங்களைப் பெற்ற நாடுகளின் பதக்க விபரங்கள் வருமாறு:

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திரக் குடியரசுகளின் பொதுநலஅமைப்பு | 32 | 22 | 20 |
| அமெரிக்கா | 17 | 22 | 20 |
| ஜெர்மனி | 14 | 10 | 19 |
| சீனா | 11 | 16 | 08 |
| ஹங்கேரி | 10 | 07 | 02 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 07 |
| தென்கொரியா | 06 | 03 | 09 |
| ஸ்பெயின் | 06 | — | — |
| பிரான்ஸ் | 06 | 04 | 12 |
| இத்தாலி | 04 | 05 | 07 |
| ருமேனியா | 04 | 04 | 06 |
| பிரிட்டன் | 04 | 03 | 05 |
| கனடா | 04 | 01 | 05 |
| ஜப்பான் | 03 | 05 | 07 |
| போலந்து | 03 | 04 | 06 |
| கியூபா | 03 | 02 | 05 |
| செக்கோஸ்லோவாக்கியா | 02 | 02 | 01 |
| துருக்கி | 02 | 01 | 01 |
| நோர்வே | 02 | 02 | — |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| பிரேசில் | 01 | 01 | — |
| வடகொரியா | 01 | — | 02 |
| எசுத்தோனியா | 01 | — | 01 |
| கிரேக்கம் | 01 | — | — |

## சிறிமா - அநுராவிற்கிடையே இணக்கம் ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும், மகன் அநுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியங்கள் பற்றி கவனமாக ஆராய்வதற்கென கட்சி வட்டாரங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றன.

சிறிமாவிற்கும், அநுராவிற்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு எம். பிக்களான சுனில் முனசிங்காவும், பி. வி குணரத்தினாவுமே சிறந்தவர்கள் எனக் கருதிய கட்சி முக்கியத்தர்களில் சிலர் அவர்களைச் சந்தித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழீழ

தமிழீழ ஆய்வு நிறுவனம் கடந்த காலத்தில் சேவையாற்றி வந்தது என்றும்,

தற்பொழுது இந்நிறுவனத்தின் பரப்பெல்லை தமிழீழத்திற்கான தனித்துவமான பொருள்மிய கட்டமைப்பை உருவாக்குவதாக இருக்கையில் கடந்த காலச் செயற்பாடுகளை துரித கதியில் விரிவாக்கம் செய்யவேண்டியுள்ள இன்றைய நிலையில் இந்நிறுவனத்திற்கு தமிழீழ பொருள்மிய மேம்பாட்டுக் கழகம் எனும் பொருத்தமான தூய தமிழ்ப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ரவி தெரிவித்துள்ளார்.

### 6 வேங்கைகள்

ராசா - வெல்லாவெளி ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரி...

- இந்தியப் பிரதமர் ராவ்

(டில்லி)

அயோத்தியாவின் இந்து—முஸ்லிம் பிரிவினருக்கிடையிலான பிரச்சினையில் அவர்கள் ஓர் இணக்கத்துக்கு வரத் தவறினால் இப்பிரச்சினையை நீதிபரிபாலனத்தின்கீழ் விடப்போவதாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அறிவித்துள்ளார்.

இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோரிடமிருந்துஅயோத்தி சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பெறும்பொருட்டு பிரதமர் தனது காரியாலயத்தில் தனிப் பிரிவு ஒன்றை அமைக்க இருக்கிறார்.

இஸ்லாமிய மதத்தலைவர்கள் உட்பட சகல அரசியல் மதத் தலைவர்களையும் இப் பிரச்சினையில் ஈடுபடுத்தி தீர்வுகாண நான் உத்தேசித்துள்ளேன் என ராவ் மேலும் தெரிவித்தார்.

## நூலகர் தேவை

ஆங்கில நூல்கள் பகுப்பாக்கம் செய்யக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்

விண்ணப்ப முடிவுத் திகதி 15.08.92

விள. இல: 164

மே/பா ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்

[2936]

## தவற விடப்பட்டது

01-08-92 அன்று சனிக்கிழமை தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவ சோதனை நிலையத்தில் (File)பயில் உடன் முக்கியமான பல ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளது அதனைக் கண்டெடுத்தவர்கள் சிவா வர்த்தக களஞ்சியம் (Siva Trading Co.), டச்சுறோட்,சாவகச்சேரி அல்லது கந்தன் களஞ்சியம், கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். ஒப்படைக்கமுடியாதவர்கள் அறியத்தந்தால் வந்து பெற்றுக்கொள்ளப்படும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:

சிவா ரேடிங் கோ,

டச்சு றோட்,

சாவகச்சேரி.

(2948)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## குமண வந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து நேற்றுக்காலை குமண என்ற கப்பல் அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறையை வந்தடைந்தது.

இக்கப்பலில் 1500 மெற்றிக் தொன் மா, 600 மெற்றிக் தொன் அரிசி, 435 மெற்றிக் தொன் சீனி, 60 மெற்றிக் தொன் பருப்பு, 50 மெற்றிக் தொன் றவ்வை, 10 மெற்றிக் தொன் மீன்ரின், சவர்க்காரம் மற்றும் வெவ்வேறு துறைசார்ந்த அமைப்புக்களின் பொருள்களும் எடுத்துவரப்பட்டுள்ளன

## தபால் பொதிகளும் வந்தன

(யாழ்ப்பாணம்)

நேற்று பருத்தித்துறையை வந்தடைந்த ''குமண'' வில் 250 வெளியூர்த் தபால்பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இத் தபால் பொதிகள் இன்று யாழ். தபாலகத்திற்கு எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வைத்தியசாலை பொருள்கள்

யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பல அத்தியாவசியப் பொருள்கள் கொழும்பிலிருந்து ''குமண'' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பாவனைக்கென புதிய ஜெனரேட்டர், ஒட்சிசன் சிலிண்டர்கள், சீமெந்து, மருந்து வகைகள், டீசல், மண்ணெண்ணெய், எஞ்சின் ஓயில் ஆகிய பொருள்களே எடுத்து வரப்பட்டவை ஆகும்.

(பா)

இடையே நேரடி மோதல் ஒன்று ஏற்பட்டது.

இம்மோதலில் இரண்டு விடுதலைப்புலிப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்



லெப். இயல்வாணன்



லெப். உலகேஸ்வரன்

வீரச்சாவு அடைந்த லெப்டினன் இயல்வாணன்(இதயன் ஜோசப் ஜெயச்சந்திரன், ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு), லெப்டினன் உலகேஸ்வரன் (கமல் - தேவதாசன் மோசல் கரடியனாறு, மட்டக்களப்பு) ஆகிய இருவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மிரட்டிய அகதிமுகாம் அதிகாரிகள் பெண்களிடம் இலங்கை திரும்ப ஒப்புதல் அளிக்கும் பத்திரத்தில் கையொப்பம் பெற்றதாகக் கோவில் பட்டி அகதி முகாமிலிருந்து இடைக்கால முகாமிற்குக்

ஐ. நா.

சென்னை வருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

இக்குழுவினர் சென்னைக்கு வருவதற்குமுன்னரே அகதிகள் திருக்கோணமலைக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டுவிட்டனர்.

மனிதநேய

பாட்டிற்காக தொழில் செய்யும்போது அவர்கள் கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு காலவரையறையின்றி தடுத்துவைக்கப்படுகின்றனர்.

எம்மிடம் இருந்த மீனவர்களில் ஒருவர் 1974-ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தின் குருநகர்ப குதியில் நைலோன் வலைத்தொழிலில் ஈடுபட்டு இருந்தவர். அப்போது பெரும் வளத்தோடு இருந்த இந்தப் பிரதேசம் இன்று குண்டு வீச்சுகளாலும், ஷெல்களாலும் பலத்த அழிவைச் சந்தித்திருப்பது பற்றி அவரே பலமுறை எம்மிடம் கவலைப் பட்டுள்ளார். இந்தகைய அனர்த்தங்களை சிங்கள தேசத்திலும் சிங்கள மக்களிடமும் எடுத்துச் சொல்லப் போவதாகவும் எம்மிடம் குறிப்பிட்டார் எனவும் தெரிவித்தார் இந்த வைபவக்கில் பேசிய அல்பேர்ட் ரணசிங்க ஆராய்ச்சிகே ரூபசிங்க குறிப்பிடுகையில் விடுதலைப்புலிகள் தங்களது குடும்ப அங்கத்தவர்களில் ஒருவரைப் போலவே எம்மைப் பராமரித்து வந்தனர் எனவும், சாதாரணமாக கூப்பிடும் போது கூட ஐயா என்றும், அண்ணன் என்றும் தான் அழைத்தனர் எனவும் தெரிவித்தார்.

தாக சிவகுரு என்னும் அகதி ஒருவர் தெரிவித்தார்.

தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

## மரண அறிவித்தல்

சரவணை மேற்கு

### இராசையா நல்லம்மா

சரவணை மேற்கைச் சேர்ந்த இராசையா நல்லம்மா அவர்கள் 01-08-92 அன்று காலமானார். இவர் பிரபல வர்த்தகர் அப்பாக்குட்டி இராசையாவின் அன்பு மனைவியும், சிந்துராசா (கொழும்பு வர்த்தகர்), விவேகானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன் (செட்டிகுள வர்த்தகர்), ராமநாதன் (டாலன், செட்டிகுள வர்த்தகர்), திருமதி குலசிங்கம் ஜெயகௌரி, சுத்தானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரது இறுதிக் கிரியை 02-08-92 அன்று (82 \) சீனிபர் லேன் கலட்டி யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:

ந. குலசிங்கம் (மருமகன்)

இளைப்பாறிய அஞ்சல் அதிபர்

[2951]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

03- 08- 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5110

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

40-1714, 27-1375, 24-6699, 28-159, 42-9325, 27-7093, 26-3250, 42-8316, 26-5157, 27-8179, 26-0334, 27-7737, 28-2345, 36-6822, 36-4552

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

27-297, 27-5461, 26-5962, 24-9145, 24-4957, 27-7794, 42-7975, 27-4823, 28-9299, 40-1688, 27-7419, 41-5973, 26-6842, 27-6032, 22-4894, 27-9771